


# முருகன்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

அன்பருக்கு அன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் வாவா முருகா
இன்பமய சேதியே நீ வாவா முருகா
ஈசன் உமை பாலகனே வாவா முருகா
உலக நாதன் மருகனே நீ வாவா முருகா
ஊமைக்கு அருள் புரிந்தவனே வாவா முருகா
எட்டுக் குடி வேலவா நீ வாவா முருகா
ஏறு மயில் ஏறியே நீ வாவா முருகா
ஐங்கரனுக்கு இளையவனே வாவா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா வாவா முருகா
ஓங்காரத் தத்துவனே வாவா முருகா
ஔவைக்கு உபதேசித்தவா வாவா முருகா
அகில லோக நாயகனே வாவா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வாவா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வாவா முருகா